FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2023 ஜனவரி

Vol. 03 - தொகுதி 01




கருப்பு ஜனவரி அனுஷ்டிப்பு பல இடங்களில்



அனுருந்த பண்டாரவின் மனு உயர்நீதிமன்றத்தால் அனுமதி



வசந்த முதலிகே விடுதலை

ஊடக சுதந்திரம் குறித்து ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜனவரி 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 12 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் என்ற தலைப்பில் 03 சம்பவம் என மொத்தம் 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன.

## ஜனவரி மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. களனி பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் இருவர் கைது.
2. அவதூறான கருத்தை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் சமூக ஊடக ஆர்வலர் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டமை.
3. சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் இயற்றப்படும் என ஜனாதிபதியின் அறிவிப்பு.
4. அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக 7 சர்வதேச அமைப்புக்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டமை.
5. "சமூக ஊடக ஒழுங்குமுறை மற்றும் கருத்துச் சுதந்திரம்" என்ற தலைப்பில் அறிவார்ந்த கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை.
6. போராட்டத்திற்கு தலைமை தாங்கிய சமூக ஆர்வலர்மீது போலீசார் நீதிமன்றத்தில் புகார் அளித்தமை.
7. சுதந்திர ஊடக இயக்கத்தின் "கருப்பு ஜனவரி அனுஷ்டிப்பு" கொழும்பில் நடைபெற்றது.
8. கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் வகையில் முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் கறுப்பு ஜனவரியை அனுஷ்டித்தனர்.
9. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதன் 13ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சத்தியாக்கிரகப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டமை.
10. ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களைக் கண்டித்து மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் "கருப்பு ஜனவரி" யை அனுஷ்டித்தமை.

11. இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு கொழும்பில் இடம்பெற்றமை.

12. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்துவுக்கு எதிராக அனுருத்த பண்டார தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் அனுமதித்தமை.

13. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேவை விடுவிக்கக் கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டமை.

14. பொலிஸாரால் தாக்கப்பட்ட சிரச ஊடகவியலாளர்கள் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை முன்வைத்துள்ளமை.

15. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதாக மனித உரிமைக்கான சர்வதேச கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 ஜனவரி மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 12 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 |
| **மொத்தம்** | **15** |

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**ஜனவரி மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 12 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பேச்சுரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் முன் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட பல நிகழ்வுகள் அவற்றில் தனித்து நிற்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவரை முதன்முறையாக நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டமை சம்பவமானது பிரஜைகளின் உரிமைகளை விரிவுபடுத்திய தனித்துவமான சந்தர்ப்பமாகும். கருப்பு ஜனவரி அனுஷ்டிப்பு தொடர்பான தகவல்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன, ஏனெனில் இது "ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையின்மை" என்ற சட்ட விதிமுறைகளின் கீழ் வருகிறது."**

**அட்டவணை 02 – 2023 ஜனவரி: சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்– 12 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 06 |
| ஊடகங்கள் மீதான சட்டக் கட்டுப்பாடுகள் / புதிய சட்டங்களைத் திணித்தல் | 01 |
| ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையின்மை | 05 |
| **மொத்தம்** | **12** |

01. **களனி பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் இருவர் கைது.**

கல்வி அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கலும் முதன்நாயக்க மற்றும் மாணவர் செயற்பாட்டாளர் டில்ஷான் ஹர்ஷன ஆகியோர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஜனவரி 02 ஆம் திகதி கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதனை தொடர்ந்து, ஜனவரி 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பெப்ரவரி 20-ம் திகதி வரை தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர்.

ஆதாரம்: [www.lankadeepa.lk](http://www.lankadeepa.lk)

02. **அவதூறான கருத்தை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் சமூக ஊடக ஆர்வலர் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டமை.**

பௌத்த மக்களின் புனிதத்தலமான தலதா மாளிகை தொடர்பில் அவமரியாதையான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜனவரி 5ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர், மறுநாள் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: [www.youtube.com](http://www.youtube.com)

03. **சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் இயற்றப்படும் என ஜனாதிபதியின் அறிவிப்பு.**

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சிங்கப்பூரில் தற்போது நடைமுறையில் உள்ள தொலைத்தொடர்பு மற்றும் சமூக ஊடகச் சட்டம் போன்ற சட்டமொன்று இந்த நாட்டிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஜனவரி 6 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக செய்திப் பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: www.adaderana.lk

**04. போராட்டத்திற்கு தலைமை தாங்கிய சமூக ஆர்வலர்மீது போலீசார் நீதிமன்றத்தில் புகார் அளித்தமை.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கடந்த ஜனவரி 30 ஆம் திகதி திருக்கோவிலில் நடைபெற்ற போராட்டத்திற்கு தலைமை தாங்கிய அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பின் தலைவர் தம்பிராசா செல்வராணியை ஜனவரி 31 ஆம் திகதி பொத்துவில் நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஆதாரம்: twitter.com

**05. சுதந்திர ஊடக இயக்கத்தின் "கருப்பு ஜனவரி அனுஷ்டிப்பு" கொழும்பில் நடைபெற்றது.**

"ஊடகத் தொழில்துறையினரைப் பாதுகாக்க ஒன்றிணைந்து முன்னோக்கி செல்வோம்" எனும் தொனிப்பொருளில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி பொரளை நாமல் மாலினி புஞ்சி திரையரங்கில் கருப்பு ஜனவரி அனுஷ்டிப்பு நடைபெற்றது. நிகழ்ச்சியின் பிரதம அதிதி உரையை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நிகழ்த்தியதுடன், கலந்துரையாடலில் ஊடகவியலாளர் ஹனா இப்ராஹிம் மற்றும் சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும ஆகியோர் கலந்துகொண்டனர். கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக தீபம் ஏற்றப்பட்டது.

ஆதாரம்: MFRM Desk

**06. கொல்லப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் வகையில் முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் கறுப்பு ஜனவரியை அனுஷ்டித்தனர்.**

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை வெளிப்படுத்தும் வகையில் முல்லைத்தீவு ஊடக அமையம் ஏற்பாடு செய்த "கருப்பு ஜனவரி" அனுஷ்டிப்பு கடந்த ஜனவரி 24ஆம் திகதி முல்லைத்தீவில் நடைபெற்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சுப்ரமணியம் சுகிர்தராஜன், லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னலிகொட ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தலும் இதில் அடங்கும்.

ஆதாரம்: twitter.com

**07. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதன் 13ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சத்தியாக்கிரகப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டமை.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளரின் மனைவியும் மனித உரிமை செயற்பாட்டாளருமான சந்தியா எக்னலிகொட கடந்த ஜனவரி 24 ஆம் திகதி மோதர மகா காளி அம்மன் கோயிலில் இந்த பிரார்த்தனையை நடத்தினார். பிரகீத் காணாமல் போனதற்கு அரசாங்கம் நீதி வழங்கத் தவறியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தனது தலையை மொட்டையடித்து, கறுப்பு ஆடை அணிந்து கடவுளிடம் மன்றாடினார்.

ஆதாரம்: MFRM Desk

**08. ஊடகங்களுக்கு எதிரான குற்றங்களைக் கண்டித்து மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் "கருப்பு ஜனவரியை" அனுஷ்டித்தமை.**

மட்டு ஊடக அமையத்தின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் சிவில் சமூக ஆர்வலர்கள் இணைந்து ஜனவரி 27 ஆம் திகதி மட்டக்களப்பில் இந்த நினைவேந்தலை நடாத்தியுள்ளனர். கடந்த சில தசாப்தங்களாக இலங்கை அரசாங்கம் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைத்த குற்றங்களை கண்டித்தும் தண்டனை விலக்களித்தலை எதிர்த்தும் ஆண்டுதோறும் இந்த நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆதாரம்: twitter.com

**09. இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு கொழும்பில் இடம்பெற்றமை.**

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூரும் நோக்கிலும், கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கோரியும் இந்த அனுஷ்டிப்பு ஜனவரி 27ஆம் திகதி விஹாரமஹாதேவி பூங்காவிற்கு முன்பாக நடைபெற்றது.

ஆதாரம்: MFRM Desk

**10. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேஷபந்துவுக்கு எதிராக அனுருத்த பண்டார தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் அனுமதித்தமை.**

சமூக ஊடக செயற்பாட்டாளர் அனுருத்த பண்டார, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி காரணமின்றி கைது செய்யப்பட்டதன் மூலம் சுதந்திரம், கருத்து சுதந்திரம் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை மீறல் தொடர்பாக இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் மற்றும் மோதர பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் நிலையத் பொறுப்பதிகாரி உட்பட 11 பொலிஸ் அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அனுருத்த பண்டார சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவொன்று ஆஜராகியுள்ளது.

திசர அனுருத்த பண்டார, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவிற்கு எதிரான போராட்டத்தில் ஒரு செயற்பாட்டாளராக இருந்ததோடு GoHomeGota2022 என்ற Facebook குழுவின் நிர்வாகியாகவும் செயற்பட்டார்.

ஆதாரம்: headlinenews.lk

**11. பொலிஸாரால் தாக்கப்பட்ட சிரச ஊடகவியலாளர்கள் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை முன்வைத்துள்ளமை.**

கடந்த வருடம் ஜூலை மாதம் 9 ஆம் திகதி பிரதமரின்

இல்லத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அறிக்கையிட்டுக்கொண்டிருந்த சிரச தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் அந்த ஊடகவியலாளர்கள் உச்ச நீதிமன்றில் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனு ஜனவரி 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான 8 ஊடகவியலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் உட்பட நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

புவனேக அலுவிஹாரே, எஸ் துரைராஜா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த மனுக்கள் ஜூலை 26-ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

ஆதாரம்: www.youtube.com

12. **பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகேவை விடுவிக்கக் கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டமை.**

ஆகஸ்ட் 18, 2022 அன்று கைது செய்யப்பட்டு 167 நாட்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் ஜனவரி 31 அன்று உத்தரவிட்டார். சந்தேகநபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்தையும் செய்ததாக எந்த ஆதாரமும் முன்வைக்கப்படவில்லை என்பது குறித்த வழக்கில் நிறுபனமாகியது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என்பதும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவாக அவதானிக்கப்பட்டது.

ஆதாரம்: www.adaderana.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் மூன்று சம்பவங்கள் ஜனவரி மாதத்தில் அவதானிக்கப்பட்டது.**

**அட்டவணை 03–2023 ஜனவரி கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 03 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| **மொத்தம்** | **03** |

01. **அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக 7 சர்வதேச அமைப்புக்கள் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டமை.**

வசந்த முதலிகே ஆகஸ்ட் 18, 2022 முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதுடன், அந்த "தன்னிச்சையான தடுப்புக்காவலை" இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய மன்றம் (FORUM-ASIA), CIVICUS, முன்னணி பாதுகாப்பு அமைப்பு , மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர்பான சர்வதேச செயற்குழு மற்றும் அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை கிளை போன்ற 7 அமைப்புக்கள் ஒன்றிணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பமிட்ட உத்தரவின் கீழ் அவர் தடுத்து வைக்கப்பட்டதுடன் மேலும் குறித்த மிக மோசமான சட்டத்தை ரத்து செய்வதாக இலங்கை அரசு நீண்டகாலம் முதல் வாக்குறுதி அளித்து வருவதாகவும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஆதாரம்: 1. www.ft.lk 2. mawbima.lk

02. **இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதாக மனித உரிமைக்கான சர்வதேச கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளமை.**

மனித உரிமைக்கான சர்வதேச கூட்டமைப்பு (FIDH) தனது சமீபத்திய அறிக்கையில், இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சட்டங்களை மீறுவதாக குற்றம் சாட்டியுள்ளதுடன், போராட்டத்தை நசுக்கி நாட்டில் அடக்குமுறையை திட்டமிட்டு முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. 116 நாடுகளைச் சேர்ந்த 188 அமைப்புகளை உள்ளடக்கிய அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவத்தை நிலைநிறுத்தப் போவதாகவும், நாட்டில் இனி எந்தப் போராட்டங்களுக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி கூறியிருப்பது மிகவும் பாரதூரமான விடயம் என்பதனையும் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆதாரம்: www.youtube.com

03. “சமூக ஊடக ஒழுங்குமுறை மற்றும் கருத்துச் சுதந்திரம்“ என்ற தலைப்பில் அறிவார்ந்த கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை.

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பின் அடிப்படையில், “ஹேஷ்டாக் தலைமுறை“ ஏற்பாடு செய்த இந்த கலந்துரையாடல் ஜனவரி 27 ஆம் திகதி அன்று இணையவழியாக நடைபெற்றது.

பேராசிரியர் ரொஹான் சமரஜீவ (தலைவர், LIRNEasia) மந்தனா இஸ்மாயில் (ஆசிரியர், த சண்டே மோர்னிங்) ஜகத் விக்கிரமநாயக்க (ஜனாதிபதி சட்டத்தரணி) ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டதுடன், கலந்துரையாடலை சட்டத்தரணி நம்யா குணவர்தன நெறிப்படுத்தினார்.

ஆதாரம்: hashtag generation

**அட்டவணை 4: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி மாதம் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | - |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 12 |
| ஊடக சுயாதீனத்துவம் | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 03 |
| **மொத்தம்** | **15** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

Free Media Movement
Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25